


இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.09.2024) ஆகஸ்ட் 31 மற்றும் செப்டம்பர் 1 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெற்ற ஃபார்முலா 4 இந்தியன் சாம்பியன்ஷிப் மற்றும் இந்தியன் ரேசிங் லீக் (Formula 4 Indian Championship and Indian Racing League) பேட்டி வெற்றிகரமாக நடை பெற்றதை முன்னிட்டு சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில், சிறப்பாக பணியாற்றிய காவல்துறை அலுவலர்களை பாராட்டி வழங்கிய சான்றிதழை காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், பெற்றுக் கொண்டார். இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சுற்றுசூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.பெய்யநாதன் பெருநகர் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகராதரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.09.2024) ஆகஸ்ட் 31 மற்றும் செப்டம்பர் 1 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெற்ற ஃபார்முலா 4 இந்தியன் சாம்பியன்ஷிப் மற்றும் இந்தியன் ரேசிங் லீக் (Formula 4 Indian Championship and Indian Racing League) போட்டி வெற்றிகரமாக நடைபெற்றதை முன்னிட்டு சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில், சிறப்பாக பணியாற்றிய மருத்துவத்துறை அலுவலர்கள் மற்றும் ஊழியர்களை பாராட்டி சான்றிதழ் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு சுற்றுசூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன். பெருநகர் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மருத்துவர் மணி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை

# சென்னையில் நடத்த நம்மால் முடியும்!

## ஃபார்முலா– 4 கார் பந்தயப் பணியாளர்களுக்கான நன்றி அறிவிப்பு விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை,செப்.14–**

**சென்னை கலைவாணர் அரங்கில், சென்னை ஃபார்மூலா–4 இரவு நேர கார் பந்தயத்தை மாபெரும் வெற்றிபெறச் செய்த, அரசு அதிகாரிகள் – அலுவலர்கள் – பணியாளர்களுக்கான நன்றி அறிவிப்புக் கூட்டத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கிப் பாராட்டிப் பேசினார். இதைத் தொடர்ந்து நடைபெற்ற உணவு விருந்திலும் கலந்துகொண்டார்.**

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நன்றி அறிவிப்புக் கூட்டத்தில் பேசிய பாராட்டுரை வருமாறு:**

இந்தப் பந்தயமே நடக்குமா நடக்காதா என்ற சந்தேகம் இருந்தது. ஒரு பந்தயம் நடந்து முடிந்து, அதற்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி நடத்துவது வித்தியாசமான அனுபவமாக இருக்கிறது.

தெற்காசியாவிலேயே முதன்முறையாக நடைபெற்ற ஃபார்முலா–4 ரேசிங் ஸ்ட்ரீட் சர்க்யூட் இரவு நேர கார் பந்தயத்தை மாபெரும் வெற்றிப் பந்தயமாக்கிய, மிகப்பெரிய நிகழ்ச்சியாக்கிய உங்கள் அனைவருக்கும் என் வணக்கத்தையும், நன்றியையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஃபார்முலா– 4 கார் பந்தயம்

நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை படைத்து வருகின்ற பல்வேறு சாதனைகளில் இந்த ஃபார்முலா–4 கார் பந்தயமும் எப்போதும் போல ஒரு தனித்துவமான இடத்தைப் பிடித்திருக்கும்.

இந்த மாபெரும் வெற்றியைச் சாத்தியமாக்கியவர்கள் நீங்கள் மட்டும்தான். எனவே, உங்களையெல்லாம் சந்தித்து நன்றி தெரிவிப்பதில், மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பெருமை அடைகிறேன்.

### வியந்து பார்க்கிறது

இங்கே நம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை பெருநகர காவல்துறை, சுற்றுலாத்துறை, நெடுஞ்சாலைத்துறை, பொதுப் பணித்துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை, செய்தி மக்கள் தொடர்புத்துறை, தீயணைப்புத்துறை, சி.எம்.டி.எ, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், போக்குவரத்துத் துறை உள்ளிட்ட துறைகளைச் சார்ந்த 1,000 பேரை இங்கு சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்று இருக்கிறேன். இந்த நன்றி அறிவிப்பு விழாவிற்கு வருகை தந்துள்ள உங்கள் அத்தனைப் பேரையும் மீண்டும் வருக, வருக என்று வரவேற்கிறேன்.

சென்னையில் நடந்த ஃபார்முலா–4 கார் ரேஸ் பந்தயத்தை இன்றைக்கு உலகமே புகழ்ந்து கொண்டிருக்கிறது. வியந்து பார்க்கிறது. எல்லோரும் பாராட்டினார்கள், வாழ்த்தினார்கள் அதற்கு முழு காரணமும் இங்கு வந்திருக்கின்ற நீங்கள் மட்டும்தான்.

நீங்கள் இல்லாமல் இந்தப் போட்டி நடந்தே இருக்காது. அதுவும் இவ்வளவு சிறப்பாக நடத்திருக்க வாய்ப்பே கிடையாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், சென்ற வருடமே நடக்க வேண்டிய போட்டி, இந்த வருடம் மழைக்காலத்திற்கு முன்பே, ஆகஸ்ட் மாத இறுதியில் நடத்தி முடிக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் கட்டளை இட்டிருந்தார்கள்.

இதற்காக தேதிகள் முடிவு செய்யப்பட்ட நாளிலிருந்தே நீங்கள் அனைவரும் இந்தப் போட்டியை உங்களின் தோளில் சுமந்து உழைக்க ஆரம்பித்தீர்கள். எந்தவிதமான தயக்கமும், களைப்பும் இல்லாமல் ஃபார்முலா–4 கார் பந்தயத்திற்கான பணிகளை நீங்கள் மிகச் சிறப்பாகச் செய்தீர்கள்.

சாலை போடுவது, துப்புரவுப் பணிகளை மேற்கொள்வது, போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவது, குடிநீர் வசதி ஏற்படுத்துவது, தடுப்புகள் அமைப்பது என்று உங்களின் பணிகளைச் சொல்லிக்கொண்டே போகலாம்.




### உண்மையான வெற்றி

இந்தப் போட்டியை எவ்வளவு பாதுகாப்பாக நடத்துகிறீர்களோ, அதுதான் இந்த போட்டியின் உண்மையான வெற்றி என்று நம் முதலமைச்சர் அவர்கள் மீண்டும், மீண்டும் நம்மிடம் சொல்லிக்கொண்டே இருந்தார். எந்தவொரு சின்ன அசம்பாவிதமும், சிறு விபத்தும் ஏற்படக்கூடாது என்று முதலமைச்சர் அவர்களுக்கு வாக்குறுதி கொடுத்துவிட்டுத்தான் இந்தப் போட்டியை நடத்துவோம் என்று நாங்கள் முடிவு செய்தோம்.

முதலமைச்சர் அவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை 100 சதவிகிதம் காப்பாற்றி இருக்கிறோம் என்றால், அதற்கு வந்திருக்கிற உங்களின் களப்பணிதான் காரணம். உங்களின் இந்த அர்பணிப்பை நானும், எங்கள் விளையாட்டுத்துறையும் என்றைக்கும் மறக்க மாட்டோம்.

### வெற்றிக்கான அடித்தளம்

நம் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அதிகாரிகள், அலுவலர்கள், ஊழியர்கள் இங்கு இருக்கிறீர்கள். இந்தப் போட்டியை நடத்தவேண்டும் என்று, நாம் நினைத்த நாள் முதல், போட்டி நடைபெற்ற நாள் வரை உங்களின் நேர்மையான திட்டமிடல் மிகச்சிறப்பாக இருந்தது. அதுதான் இந்தப் போட்டியின் வெற்றிக்கான அடித்தளம் என்றே சொல்லலாம்.

நம் துறையைச் சார்ந்த அத்தனை பேருக்கும் வாழ்த்துகளை, பாராட்டுகளை, நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாநகராட்சிப் பணியாளர்கள், குறிப்பாக தூய்மைப் பணியாளர்களைப் பற்றி சொல்லியே ஆக வேண்டும். அதிகாலையிலும், அடிக்கின்ற வெயிலிலும் வேலை செய்தார்கள். தூய்மைப் பணியாளர்கள் மிகவும் சிரமப்பட்டு, இந்தப் போட்டி நடைபெறும் சாலைகளை தூய்மையாக வைத்திருந்தார்கள்.

காவல்துறை நண்பர்களின் உழைப்பைப் பற்றி இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும். ஏனென்றால், இதில் பெரிய சவாலே டிராபிக் மானேஜ்மென்ட்தான். இந்த ரேஸ் மிக முக்கியமான பகுதியில் நடக்கிறது. மக்கள் நடமாட்டம், வாகன நெரிசல் நிறைந்த பகுதியில் நடத்துகிறோம். நிறைய பேர் எதிர்பார்த்தார்கள் கண்டிப்பாக டிராபிக் ஜாம் ஆகும், அதை புகைப்படம் எடுத்து பெரிய செய்தியாக்கலாம் என்று நினைத்தார்கள்.

இன்னும் சொல்லப்போனால், இந்தப் போட்டியை எப்படியாவது நிறுத்தியாக வேண்டும் என ஒரு சிலர் நினைத்தார்கள். நீங்கள் சமூக வலைதளங்களில் ரீல்ஸ் எல்லாம் பார்த்திருப்பீர்கள். ஒருபக்கம் ரேஸ் அழகாக நடந்து கொண்டிருந்தது. இன்னொருப் பக்கம் வாகனங்கள் டிராபிக் ஜாம் இல்லாமல் போய் கொண்டிருந்தது. அதைப் பார்த்த பிறகும், நம்மை விமர்சனம் செய்து கொண்டிருந்தவர்கள்கூட நம்மைப் பாராட்ட ஆரம்பித்தார்கள். அதற்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### என் வாழ்த்துகள்

சின்னதாக ஒரு விபத்து நடந்திருந்தால்கூட அதை ஊதி பெரிதாக்க நிறைய பேர் காத்திருந்தார்கள். இன்னும் சொல்லப்போனால், இரண்டு நாய் குட்டிகள் உள்ளே வந்துவிட்டன. அதைக்கூட விமர்சனம் செய்தார்கள். நாய் ரேஸ் நடத்துகிறார்களா, கார் ரேஸ் நடத்துகிறார்களா என்று. நாம் நடத்துவது F–4 அதுவும் நகரத்திற்குள் நடத்துகிறோம். F–1 ரேசில் கூட உள்ளே நாய்குட்டி, முயல் குட்டி, மான்குட்டி எல்லாம் உள்ளே வந்து விடும். இதுகூட தெரியாத அறிவாளிகள்தான் நம்மை விமர்சனம் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால், அதையெல்லாம் தவுடுபுடியாக்கி, இவ்வளவு பெரிய வெற்றியைக் கொடுத்து இருக்கிறீர்கள். ரேஸ் நடந்த இரண்டு நாட்களும் எந்தப் பிரச்சனையும் இல்லாமல் நடத்திக் காட்டியிருக்கிறீர்கள். அதற்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த அத்தனைக் காவலர்களுக்கும், மீட்புப் பணிக்காக தயார் நிலையில் இருந்த தீயணைப்பு வீரர்களுக்கும் அன்பையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சென்னையில் நடந்த ஃபார்முலா–4 கார் ரேஸ் பந்தயத்தை இன்றைக்கு உலகமே புகழ்ந்து கொண்டிருக்கிறது. வியந்து பார்க்கிறது. எல்லோரும் பாராட்டினார்கள், வாழ்த்தினார்கள் அதற்கு முழு காரணமும் இங்கு வந்திருக்கின்ற நீங்கள் மட்டும்தான்.**



சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்தின் அலுவலர்கள், ஊழியர்கள் எல்லா நேரமும் களத்தில் நின்று, வீரர்களுக்கு பொது மக்களுக்கு என்ன தேவை என்று பார்த்து பார்த்து நீங்கள் அனைவரும் உதவி செய்தீர்கள். சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த அதிகாரிகள், அலுவலர்கள் இங்கு இருக்கிறீர்கள்.

நியாயமாகப் பார்த்தால் உங்களின் பணிதான் முதலில் ஆரம்பித்தது. உங்களின் உபசரிப்பாக இருக்கட்டும், உங்கள் பகுதியில் ஸ்டாண்ட் அமைக்க ஒத்துழைத்தாக இருக்கட்டும், எல்லா வகையிலும் இந்த போட்டியை சிறப்பாக நடத்த நீங்கள் அத்தனைப்பேரும் எங்களுக்குத் துணை நின்று இருக்கிறீர்கள்.

நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித்துறை ஊழியர்களுக்கும் எனது நன்றி. சர்வதேச தரத்தில் நடத்துகின்ற போட்டிக்கு எப்படி டிராக் தயார் செய்யப்பட வேண்டுமோ, நாங்கள் எதிர்பார்த்ததைவிட, சிறப்பாக நீங்கள் செய்து காட்டி இருக்கிறீர்கள். அதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லாவற்றையும்விட மிக முக்கியம், எங்களின் செயலாளர் அதுல்யா மிஸ்ரா அவர்களுக்கும், சிறப்பு செயலாக்கத் துறையின் (SDAT) உறுப்பினர் செயலாளர் மேகநாத் ரெட்டி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் இரண்டு பேரும் இல்லை என்றால், இந்த ரேஸ் நடந்திருக்குமா என்பதே ஒரு சந்தேகம்தான். சென்ற வருடமே, `நடத்துகிறோம்' என்று ஒப்புக்கொண்டோம். பிறகு நடத்த முடியாமல் போய்விட்டது. அதன்பிறகு, இந்த வருடம் எப்படியாவது நடத்திட முடிவு செய்து நடத்திக் காட்டினோம்.

பல்வேறு விமர்சனங்கள் `இது தேவையா', `இதை நடத்திக் காட்ட வேண்டுமா' என்று, இதை நடத்தவில்லை என்றாலும் விமர்சனம் செய்திருப்பார்கள். `சென்ற வருடம் நடத்துவோம் என்று சொன்னீர்களே ஏன் நடத்தவில்லை' என்று கேள்வி கேட்டிருப்பார்கள். இருந்தாலும் நடத்திக் காட்டுவோம். நம்மாலும் சென்னையில் சர்வதேச அளவில் நிகழ்ச்சி நடத்த முடியும் என்று செய்து காட்டுவதற்கு முழுவதும் எனக்கு உறுதுணையாக இருந்த அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும், விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத் ரெட்டி ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியை மீண்டும், மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களின் பணிகளைப் பார்த்த பிறகு, இனி எப்படிப்பட்ட சர்வதேச விளையாட்டுப் போட்டியையும் சென்னையில் நடத்தலாம் என்ற உறுதியான எண்ணம் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இறுதியாக ஒரேயொரு விஷயம் ஃபார்முலா–4 ரேஸை நாம் வெற்றிக்கரமாக நடத்தி முடித்துவிட்டோம். ஆனால், பணிகள் இன்னும் முடியவில்லை.

எப்படி நாம் ஏற்பாடுகளைச் செய்தோமோ, அதேபோல் சாலைகளை அந்தப் போட்டிகள் நடந்த இடத்தையெல்லாம் முந்தைய நிலைமைக்கு நாம் கொண்டுவர வேண்டும். ஏற்கனவே அமைத்த தடுப்புகளை அப்புறப்படுத்துவது. சாலைகளைச் சரிசெய்யும் பணிகளும் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கிறது.

உங்களையெல்லாம் பாராட்டுகின்ற அதே வேளையில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் அப்புறப்படுத்துகின்ற பணிகளையும் நீங்கள் கவனமாக செய்து முடிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் தாழ்மையோடு வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

மிக முக்கியமாக சென்னையின் கார் பந்தய விளையாட்டு ரசிகர்கள் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆரம்பத்தில், எத்தனை ஸ்டேண்ட்ஸ் போடப் போகிறோம், எத்தனை கேலரிஸ் போடப் போகிறோம் என்று சொல்லும்போது கிட்டத்தட்ட 8 ஆயிரம் பேர் அமர்வதற்கு வசதியாக இருக்கைகள் அமைக்கப்படும் என்று சொன்னார்கள்.

### மிகச்சிறப்பாக ஏற்பாடு!

நாங்கள் நினைத்ததைவிட அதிகமான டிக்கெட் விற்பனையானது. யார் இந்த கார் ரேஸை நடத்தக்கூடாது நிறுத்தவேண்டும் என்று நினைத்தார்களோ, அவர்களெல்லாம் இரண்டாவது நாள் `எங்களுக்கு டிக்கெட் கிடைக்காதா, எங்களுக்கும் பாஸ் கொடுங்கள்' என்று கேட்கின்ற அளவிற்கு மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

இன்னும் சொல்லவேண்டும் என்றால், 3 நாட்கள் நடக்க வேண்டிய ரேஸ் இது. வெள்ளி, சனி, ஞாயிறு. முதலமைச்சர் சொல்லிவிட்டார் மூன்று நாட்கள் எல்லாம் வேண்டாம் இரண்டே நாட்களில் நடத்தி முடியுங்கள், பொதுமக்களுக்கு எந்த விதமான இடையூறும் இருக்கக்கூடாது என்று இரண்டே நாட்களில் நடத்தி முடித்தோம்.

சனிக்கிழமை கார் ரேஸ் எவ்வளவு விறுவிறுப்பாகப் போகுமோ, அதைவிட விறுவிறுப்பாக கார் ரேஸ் நடக்குமா நடக்காதா என்ற விறுவிறுப்பு நிறைய இருந்தது. முக்கியமாக பாதுகாப்புப் பணிகளுக்காகத்தான் அந்த சான்றிதழுக்காகத்தான் அதிக நேரம் காத்துக் கொண்டிருந்தோம். அதன் பிறகு அந்தப் பாதுகாப்புச் சான்றிதழ் வந்தபிறகு, சனிக்கிழமை மாலையிலிருந்து இந்த ரேஸ் ஆரம்பித்து, ஞாயிற்றுக்கிழமை இரவு 10.30 மணி வரைக்கும் மிக சிறப்பாக நடந்தது.

### அன்பும் நன்றியும்

முழுமையாக ஒத்துழைப்பு கொடுத்த கார் பந்தய ரசிகர்கள், சென்னை மட்டும் அல்ல தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், பல்வேறு மாநிலங்களில் இருந்தும் இந்த ரேஸை பார்ப்பதற்கு வந்திருந்தார்கள். அவர்கள் அனைவரும் ஒத்துழைத்தார்கள். அவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விளம்பரதாரர்கள், காரை ஓட்டிய வீரர்கள், அதை ஒருங்கிணைத்தவர்கள் அத்தனைப்பேருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை ஃபார்முலா 4 என்ற வரலாற்றில் உங்களின் பெயர்களும் என்றைக்கும் நிலைத்து நிற்கும் என்று கூறிக்கொண்டு உங்களுக்கெல்லம் மீண்டும் என் அன்பையும், நன்றியையும் தெரிவித்துக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, சிவ.வீ.மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, காவல்துறை இயக்குநர் சங்கர் ஜிவால் ஐ.பி.எஸ்., விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., தீயணைப்பு மற்றும் மீட்புத்துறை இயக்குநர் ஆகாஷ்குமார் ஐ.பி.எஸ்., சென்னை மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் ஐ.ஏ.எஸ்., துணை மேயர் மகேஷ்குமார், சென்னை மாநகர காவல்துறை ஆணையர் அருண் ஐ.பி.எஸ்., விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத் ரெட்டி ஐ.ஏ.எஸ்., மற்றும் அரசு அதிகாரிகள் அலுவலர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.